செய்தி வெளியீடு எண்.513 நாள். 21.8.2009

**பழைமையான தீயணைப்பு வாகனங்களுக்குப் பதிலாக**
**30 கோடி ரூபாய் செலவில் 171 புதிய வாகனங்கள்!**
**முதற்கட்டமாக, 15 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு**
**16 புதிய தீயணைப்பு வாகனங்கள்!**

**முதலமைச்சர் கலைஞர்**
**புதிய வாகனங்களின் சாவிகளை வழங்கினார்!**

தமிழகத்தில் மொத்தம் 285 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களும், 1 மீட்புப் பணி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களுக்கு 413 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி வாகனங்கள் வழங்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்த வாகனங்கள் அனைத்தும் ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

பல ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இருந்துவரும் தீயணைப்பு வாகனங்களுக்குப் பதிலாகப் புதிய தீயணைப்பு வாகனங்களை வாங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, மூன்றாண்டுகளில் 30 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 171 தீயணைப்பு வாகனங்கள் வாங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 2008–2009ஆம் ஆண்டில் 2 தண்ணீர் லாரிகள், ஒரு சிறிய நுரைதகர்வு ஊர்தி ஆகியவற்றுடன் பழைமையான நீர்தாங்கி வாகனங்களுக்குப் பதிலாக 25 புதிய நீர்தாங்கி வாகனங்கள் என மொத்தம் 31 வாகனங்கள் 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கிட அனுமதிக்கப்பட்டு, இந்த 31 வாகனங்களுக்கான கட்டுமானப் பணிகள் கோவையில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றுள் தற்போது 16 நீர்தாங்கி வாகனங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, அவை பயன்பாட்டிற்குத் தயாராகியுள்ளன.

அவற்றில், திருவொற்றியூர், கலவை, சூரமங்கலம் ஆகிய 3 புதிய தீயணைப்பு நிலையங்களுக்கு தலா ஒன்று வீதம் மூன்று வாகனங்களும்; குடவாசல், உளுந்தூர்பேட்டை காட்டுமன்னார்கோவில், மயிலாடுதுறை, அத்திப்பட்டு, செய்யாறு, ஆம்பூர், வாணியம்பாடி, கொல்லிமலை, மேட்டூர், இராஜபாளையம் ஆகிய 11 தீயணைப்பு நிலையங்களுக்கு தலா 1 வாகனம்; சிவகாசி தீயணைப்பு நிலையத்திற்கு இரண்டு வாகனங்கள் என 12 தீயணைப்பு நிலையங்களில் உள்ள பழைய வாகனங்களுக்குப் பதிலாக 13 புதிய வாகனங்களும் ஆக மொத்தம் 16 புதிய தீயணைப்பு வாகனங்களுக்கான சாவிகளைத் தலைமைச் செயலகத்தில் இன்று (21.8.2009) நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஓட்டுநர்களிடம் வழங்கினார்.

இவ்விழாவின்போது, தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, இ.ஆ.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்துறை இயக்குநர் திரு. ஆர்.நடராஜ், இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.